சிவகாசியில் ரயில்வே மேம்பாலம்

பணிகள் தொடங்கிய ஒரு மணி நேரத்தில் நிறுத்தம்

சிவகாசியில் ரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிகள் நேற்று காலை தொடங்கியது. அடுத்தபடம்: பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

சிவகாசி, ஆக.13: சிவகாசியில் ரயில்வே மேம்பாலம் பணிகள் தொடங்கிய ஒரு மணி நேரத்தில் நிறுத்தப்பட்டது. தூண் அமைக்க 20 அடிவரை குழிதோண்டிய நிலையில் மூடப்பட்டது. இதனால் சிவகாசி மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

சிவகாசியில் சாட்சியாபுரத்தில் ரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டும் என்று கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் வலியுறுத்தி வருகின்றனர். சாட்சியாபுரம் ரயில்வே கிராசிங்கில் மேம்பாலம் அமைக்க 2021ல் ஒப்புதல் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேம்பாலம் அமைக்கும் பணிகளுக்கு ரூ.61 கோடியே 77 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிக்கு கடந்த பிப்ரவரி மாதம் 26ம் தேதி பிரதமர் நரேந்திர மோடி காணொலி மூலம் அடிக்கல் நாட்டினார். கடந்த மாதம் 18 மற்றும் 19ம் தேதியில் மாற்றுப்பாதைகளில் வாகனங்களை இயக்கி சோதனை நடைபெற்றது. கடந்த மாதம் 26ம் தேதி பூமி பூஜை போட்டு மீண்டும் பணிகள் தொடங்கப்பட்டது. பாலம் அமைக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெறும் என்று எதிர்பார்த்த நிலையில் பணிகள் கிடப்பில் போடப்பட்டன. இது குறித்து தினகரனில் நேற்று செய்தி வெளியானது.

இந்நிலையில் சாட்சியாபுரம் ரயில்வே கிராசிங்கில் ரயில்வே மேம்பாலம் பணிகள் நேற்று காலை 10 மணி அளவில் தொடங்கியது. ஜேசிபி, கிட்டாச்சி உதவியுடன் குழி தோண்டும் பணிகள் நடைபெற்றது. இதற்காக குழி தோண்டும் பகுதியை சுற்றி பேரிகார்டுகள் வைக்கப்பட்டன. பணிகள் தொடங்கிய போது போலீசார் இல்லாததால் சாலையின் இரண்டு புறமும் வாகனங்கள் அணிவகுத்து நின்றன. போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதை தொடர்ந்து போலீசார் விரைந்து வந்து போக்குவரத்தை சீர் செய்தனர். தொடர்ந்து இரட்டை பாலத்தில் இருந்து லாரிகள், பஸ்கள் மற்றும் சரக்கு வாகனங்கள் விளாம்பட்டி ரோடு, ஆனையூர், லட்சுமியாபுரம் வழியாக திருப்பி விடப்பட்டன.

சுமார் ஒரு மணி நேரம் 20 அடி வரை குழி தோண்டிய நிலையில் திடீரென பணிகள் நிறுத்தப்பட்டன, தோண்டிய குழியில் மீண்டும் மண் போட்டு மூடப்பட்டன. பணிகள் ஆரம்பித்த ஒரு மணி நேரத்தில் பணிகள் நிறுத்தப்பட்டதால் சிவகாசி மக்கள் மீண்டும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

20 அடி தோண்டிய நிலையில் மூடப்பட்டது

எம்எல்ஏ–அதிகாரிகள் மோதல்?

சாட்சியாபுரம் ரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்து பலமுறை நெடுஞ்சாலை துறை, காவல்துறை, வருவாய்த்துறை, வட்டார வளர்ச்சிதுறை, போக்குவரத்து துறை அதிகாரிகளுடன் சிவகாசி எம்எல்ஏ அசோகன் கலந்தாய்வு செய்துள்ளார். பலமுறை அதிகாரிகளுடன் சென்று மாற்றுப்பாதைகளில் ஆய்வும் செய்தார். தொடர்ந்து மாற்றுப்பாதைகளில் 2 இடங்களில் சுமார் 90 லட்சம் மதிப்பீட்டில் புதிய தார் சாலையும் எம்எல்ஏ வளர்ச்சி நிதியில் அமைக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த 10ம் தேதி அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் 12ம் தேதி பணிகள் தொடங்கும் என்று எம்எல்ஏ தெரிவித்தார். ஆனால் அதற்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் செய்து கொடுக்கவில்லை. இருந்த போதிலும் நேற்று சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் மூலம் அசோகன் எம்எல்ஏ உதவியாளர் சதீஷ் நேரடி கண்காணிப்பில் போலீஸ் பாதுகாப்பு இன்றி பணிகள் தொடங்கப்பட்டது. இது குறித்து கேள்விப்பட்ட அதிகாரிகள் டென்சன் ஆகிவிட்டனர். உடனடியாக பணிகளை நிறுத்த வேண்டும் என்று சப்-கலெக்டர் தெரிவித்ததாக கூறப்படுகின்றது. இதனால் பணிகள் உடனடியாக நிறுத்தப்பட்டது. பாலம் அமைக்க எம்எல்ஏ மிகவும் ஆர்வமாக இருந்த போதிலும் அதிகாரிகள் ஒத்துழைப்பு இல்லாததால் பாலம் அமைக்கும் பணிகள் மீண்டும் கிடப்பில் போடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

17ம் தேதிக்கு பின் மீண்டும் ஆலோசனை கூட்டம்

சிவகாசி எம்எல்ஏ அசோகன் கூறும்போது, பணிகள் தொடங்குவதற்கு முன்பு முறைப்படி அனைத்து துறை அதிகாரிகளுடன் கடந்த 10ம் தேதி கலந்தாய்வு செய்யப்பட்டது. பணிகள் தொடங்கும் தேதி, நேரம் தேவையான பாதுகாப்பு குறித்து டிஎஸ்பியிடம் நேற்று முன்தினம் முறைப்படி தபால் கொடுத்துள்ளேன். இன்று(நேற்று) முறைப்படி பணிகள் திட்டமிட்டபடி தொடங்கியது. மாற்றுப்பாதை சரியான முறையில் இல்லை என்று காரணம் கூறி பணிகளை அதிகாரிகள் திடீரென நிறுத்தி விட்டனர். இது குறித்து மாவட்ட கலெக்டரிடம் தொலைபேசியில் பேசினேன். மீண்டும் ஒரு முறை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளை கொண்டு ஆலோசனை செய்து பணிகளை தொடங்கலாம் என்று கூறினார். எனவே வரும் 17ம் தேதிக்கு பிறகு மீண்டும் சம்பந்தப்பட்ட அனைத்து துறை அதிகாரிகளுடன் ஆலோசனைக்குபிறகு பாலம் அமைக்கும் பணிகள் தொடங்கும் என்றார்.

கார் கவிழ்ந்து ஒருவர் பலி

அருப்புக்கோட்டை, ஆக.13: மதுரை மாவட்டம், பாலமேடு வலையபட்டியை சேர்ந்தவர் கார்த்திக்ராஜன்(50). இவர் 6 பேருடன் காரில் திருச்செந்தூருக்கு சாமி கும்பிட சென்றார். சாமி கும்பிட்டு விட்டு ஊருக்கு செல்லும் போது அருப்புக்கோட்டை அருகே கொப்புசித்தம்பட்டி விலக்கு அருகில் வந்து கொண்டிருந்தனர். அப்போது கார் எதிர்பாராதவிதமாக நிலை தடுமாறி கவிழ்ந்தது. இதில் கார்த்திக்ராஜன் சம்பவ இடத்திலேயே பலியானார். மேலும் காரில் வந்த வலையபட்டியை சேர்ந்த பிரபாகர், திலீபன், பஞ்சவர்ணம், நந்தகுமார், மலை அக்கா, ஜெயக்குமார், டிரைவர் ராம்கண்ணன் ஆகிய 7 பேர் காயம் அடைந்தனர். இது குறித்து தகவல் அறிந்த பந்தல்குடி போலீசார் கார்த்திக்ராஜனின் உடலை கைப்பற்றி அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் வழக்குபதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

Piramal Capital & Housing Finance

பிரமல் கேப்பிடல் அண்டு ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் திவான் ஹவுசிங் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் என அறியப்பட்டது)
கதவு எண்.12, 1வது தளம், சண்முகபவனம், OCPM பள்ளி சாலை, காமராஜ் நகர் 2வது தெரு, சின்ன சொக்கிகுளம், மதுரை - 625 002.

பிற்சேர்க்கை-IV சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்காக)

கீழே கையொப்பமிட்டுள்ளவர், பிரமல் கேப்பிடல் அண்டு ஹவுசிங் /ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்பு திவான் ஹவுசிங் /ஃபைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது)-இன் அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(12)-இன் கீழும் அதனுடன் கடனிட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002-இன் விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் கோரிக்கை அறிவிப்புகளைக் கீழ்க்காணும் கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ள தொகையை அந்த அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார். கடன்தாரர் அத்தொகையினைச் செலுத்தத் தவறியபடியால் கடன்தாரர்(கள்) ஜாமீன்தாரர்(கள்)-க்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13 உட்பிரிவு (4) மற்றும் அதனுடன் கடனிட்டுச் சொத்து அமலாக்கம் விதிகள் 2002-இன் விதி 8-இன் கீழ் தமக்கு உள்ள உரிமைகளைப் பயன்படுத்திக் கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார். மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (8)-இன்படி கடனீட்டுச் சொத்துக்களை மீட்க கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அழைப்பு விடுக்கப்படுகிறது. கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்குப் பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், அச்சொத்தின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம் மீறினால் அது கீழே குறிப்பிட்டுள்ள தொகையை வட்டியுடன் PCHFL-க்குச் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

வ. எண்.	கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர் பெயர்கள்	கேட்பு அறிவிப்பு தேதி & தொகை	சுவாதீனம் எடுத்த தேதி
1	கடன் விண்ணப்ப எண். (00592850) கடன்தாரர் : ஆனந்தி.P, (இணை கடன்தாரர்) : பாண்டியன் ராஜூ.C	29-04-2023 ரூ. 8,06,267/-	10-08-2024
	கதவு எண்.17/2A, டவுன் சர்வே எண்.2/7, மனை எண்.6, பாண்டியன் நகர் 2வது தெரு, கழனிவாசல், காரைக்குடி நகராட்சி, காரைக்குடி சிவகங்கை, தமிழ்நாடு - 626 056.		
2	கடன் விண்ணப்ப எண். (01157903) கடன்தாரர் : பஞ்சவர்ணம்.P, இணை கடன்தாரர் : தனசேகரன்.L	28-06-2021 ரூ. 9,11,334/-	10-08-2024
	மறு சர்வே எண்: 378/5A2 & 378/5B2, மனை எண்: 53 & 54, லட்சுமணன் நகர், பாம்புவிழுந்தான் கிராமம், S ஆண்டக்குடி பஞ்சாயத்து பரமக்குடி, ராமநாதபுரம் மாவட்டம், ராமநாதபுரம், தமிழ்நாடு - 623 707.		
3	கடன் விண்ணப்ப எண். (01155237) கடன்தாரர் : சண்முகசுந்தரம்.I, இணை கடன்தாரர் : பத்மாஜினி.M	29-05-2021 ரூ. 9,48,876/-	10-08-2024
	கதவு எண்.14, சுவாமிநாதன் செட்டியார் தெரு, டவுன் சர்வே எண்:14 பகுதி, முத்துப்பட்டினம், வார்டு எண்:1 காரைக்குடி, சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, தமிழ்நாடு - 630 001		
4	கடன் விண்ணப்ப எண். (01614435) கடன்தாரர் : அன்புசெல்வன்.P, இணை கடன்தாரர் : பெரியசாமி.P	04-11-2022 ரூ. 15,18,261/-	10-08-2024
	மனை எண்:40, சர்வே.எண்: 50/1, S.D.S.எண்:50/1F3, செந்தமிழ் நகர், நெல்லிபுஞ்சை கிராமம், காளையார்கோயில் பஞ்சாயத்து, காளையார்கோவில், சிவகங்கை, தமிழ்நாடு - 630 551		
5	கடன் விண்ணப்ப எண். (01675351) கடன்தாரர் : மதிவாணன் முத்துவேலு, இணை கடன்தாரர் : ரேணுகாதேவி மதிவாணன்	24-09-2021 ரூ. 6,43,663/-	10-08-2024
	மனை எண்: 355, 356, சர்வே எண்:301/2, S.D.S.எண்: 301/17/A1, பெமினா வின் தென்றல் நகர், பெரிய நரிக்கோட்டை கிராமம், கொல்லங்குடி , காளையார்கோயில், சிவகங்கை, தமிழ்நாடு - 630 561		

இடம் : மதுரை/சேலம் அதிகாரபூர்வ அதிகாரி
தேதி : 12.08.2024 பிரமல் கேப்பிடல் அண்டு ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

அடிப்படை வசதிகள் கோரி மனு

சாலை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கேட்டு விருதுநகர் கலெக்டர் அலுவலகத்தில் மனு அளிக்க வந்த அருப்புக்கோட்டை கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி ஸ்ரீஜெயநகர் குடியிருப்போர் நல சங்கத்தினர்.

விருதுநகர், ஆக.13: அடிப்படை வசதிகள் கோரி குடியிருப்போர் நலச்சங்க நிர்வாகிகள் கலெக்டர் அலுவலகத்தில் மனு அளித்தனர்.

விருதுநகர் கலெக்டர் அலுவலகத்தில் ஸ்ரீஜெயநகர் குடியிருப்போர் நலச்சங்க நிர்வாகிகள், குடியிருப்புவாசிகள் நேற்று மனு அளித்தனர். மனுவில், அருப்புக்கோட்டை அருகில் கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி ஸ்ரீஜெயநகரில் 200க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. அனைத்து தரப்பு மக்கள் வசிக்கும் பகுதியில் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை. சாலை வசதி, குடிநீர், கால்வாய், தெருவிளக்கு வசதிகள் என எதுவுமே இல்லை. ஊராட்சி தலைவர் துவங்கி கலெக்டர் வரை பலமுறை மனு அளித்தும் நடவடிக்கை இல்லை. கலெக்டர் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

சிவகாசி மாநகராட்சி அலுவலகத்தில்

போதை ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு

சிவகாசி மாநகராட்சி அலுவலகத்தில் போதையில்லா தமிழ்நாடு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி மேயர் சங்கீதாஇன்பம் தலைமையில் நேற்று நடந்தது.

சிவகாசி, ஆக.13: சிவகாசி மாநகராட்சி அலுவலகத்தில் போதையில்லா தமிழ்நாடு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நேற்று நடந்தது.

தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின் பேரில், போதையில்லா தமிழ்நாடு உருவாக்குவோம் என்ற உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி சிவகாசி மாநகராட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. மேயர் சங்கீதா இன்பம் தலைமை வகித்தார். துணை மேயர் விக்னேஷ்பிரியா காளிராஜன், ஆணையாளர் கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தனர். மண்டல குழுத் தலைவர் குருசாமி, மாநகர நல அலுவலர் சரோஜினி, சுகாதார பிரிவு அதிகாரிகள் பகவதிபெருமாள், திருப்பதி, சுரேஷ்குமார், சத்தியராஜ், அபுபக்கர்சித்திக், நகரமைப்பு அலுவலர் மதியழகன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள், போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீயவிளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாக மாட்டேன். மேலும் எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். மாநில வளர்ச்சிக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் என்னை அர்ப்பணிப்பேன் என்று உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்.

சூரியன் பதிப்பகம்

TNPSC II & IIA

தேர்வில் வெற்றி பெற!

பொதுத்தமிழ் மற்றும் கட்டாயத்தமிழ் தகுதித் தேர்வுக்கான சிறந்த வழிகாட்டி கையேடு...

₹335/-

₹1500/- (PART I & II)

பொது அறிவு பாடக்குறிப்புகள் மற்றும் மாதிரி வினா-விடைகள் அடங்கிய கைடுகள்!

கொரியர் கட்டணம் இல்லை

QRcode-ஐ ஸ்கேன் செய்து Payment செலுத்திவிட்டு, Payment செய்த ஸ்கிரீன் ஷாட்டையும் கொரியர் செய்வதற்கான முகவரி மற்றும் மொபைல் எண்ணையும் சேர்த்து 9840224816 என்ற WhatsApp நம்பருக்கு அனுப்பி உங்கள் ஆர்டரை உறுதி செய்து கொள்ளவும்.

மணியார்டர் மற்றும் டிமாண்ட் டிராஃப்ட் அனுப்புபவர்கள் சூரியன் பதிப்பகம், எண் 229, கச்சேரி ரோடு, மயிலாப்பூர், சென்னை - 4. என்ற முகவரிக்கு அனுப்பவும். போன்: 044 - 4220 9191

மேலும் விவரங்களுக்கு...

98946 25343 | 72990 27361 | 74487 28022

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு
(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8 (6) உடன் விதி 9(1) கீழ்)
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் 8(6) மற்றும் விதி 9(1) உடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை மின்-ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/ பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எஃப்எல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்" & "உள்ளது உள்ளவாறு" மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் 30–08–2024 நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. அறிவிப்பு இதன்மூலம் வழங்கப்படுவதாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய 30–08–2024 நாளில் பிற்பகல் 2 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், #6A, டாக்டர். அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் 29–08–2024 அன்று மாலை 5 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்" ஆனதாகும்;

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / உப-கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை
6	10026992 & 10064994	திரு. முருகன் M திருமதி. பஞ்சவர்ணம் M	ஒப்பந்த எண்: 10026992 கீழ் நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.6,17,791/- மேலும் ஒப்பந்த எண்: 10064994 கீழ் தொகை ரூ.7,32,467/- நிலுவை மற்றும் உங்களால் செலுத்தப்பட வேண்டியதாக உள்ளது) மொத்தத்தில் ரூ.13,50,258/- (ரூபாய் பதின்மூன்று இலட்சத்து ஐம்பது ஆயிரத்து இருநூற்று ஐம்பத்தெட்டு மட்டும்) & 16-11-2019	ரூ. 15,90,000/- (ரூபாய் பதினைந்து லட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்)	ரூ. 1,59,000/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பத்தி ஒன்பதாயிரம் மட்டும்)	கையக

அசையாச் சொத்து விவரம்: சிவகங்கை மாவட்டம், சிவகங்கை பதிவு மாவட்டம், சிவகங்கை இணை 2 சார் பதிவாளர் அலுவலகம், சிவகங்கை வட்டம், கொட்டக்குடி குழு, கொட்டக்குடி கீழ்பாதி கிராமத்தில் அமைந்துள்ள, சர்வே எண். 101/பகுதி, பரப்பளவு 1026 சதுர அடி வீட்டு மனையின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும் அடங்கிய சொத்து. இதில் பின்வரும் **எல்லைகளுக்குள்:** வடக்கில்: 20 அடி தெற்கு வடக்கு கிழக்கு மேற்கு பொது பாதை, தெற்கில்: ராமசாமி நகர் மனை, கிழக்கில்: வீட்டு மனை எண்.19சி, மேற்கில்: கொட்டக்குடி ஆறுமுகம் வீடு, அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 30 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்: 24 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம்: 37 ½ அடி, தெற்கு வடக்காக மேற்கு பக்கம்: 38 ½ அடி. **மொத்தம் 1026 ச.அடி.** இதில் சர்வே எண். 101/1, என்.எச்.ஒ.12.5 இல் உள்ள 0.31 செண்ட்களில் வடக்குப் பக்கத்தில் உள்ள 8 ¼ செண்ட்கள் நிலத்தில் மீதமுள்ள என்.ஏ. 0.22 ¾ செண்ட்களுடன் சர்வே எண். 101/1A, என்.ஏ.0.04.0 இல் 0.10 செண்ட்கள் மற்றும் சர்வே எண். 101/1B, என்.ஏ.0.08.5 இந்த என்.ஏ.0.21 செண்ட்கள் பட்டா எண்.12, மற்றும் 275 உடன் வழக்கமான பாதை வழிகள், பொது சாலை வசதிகள், பொது லே அவுட் உரிமைகளுடன் ஏனையவை.

ஏலத்தில், பொதுவாகப் பொதுமக்கள் தனிப்பட்டு தங்கள் ஏலப்புள்ளி(களை) சமர்ப்பிக்க வரவேற்கப்படுகின்றனர். கடன்தாரர்(கள்)/உப–கடன்தாரர் (கள்) இந்த அறிவிப்பு பிரசுரமான தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைகளைச் செலுத்த இதன்மூலம் கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது, தவறினால் அசையாச் சொத்து அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும். ஏலத்தேதிக்கு முன்பாக மேற்கூறிய நிலுவைத்தொகை, வட்டி மற்றும் செலவுகளுடன் (விற்பனை செலவு உட்பட) அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் வழங்கப்பட்டால் அல்லது இவ்வித கடனீட்டுக் கடன்தொகை, வட்டி மற்றும் செலவுகள் செலுத்தப்பட்டுள்ளன என்று அவருடையத் திருப்திக்குரியவாறு சான்று அளிக்கப்பட்டால் மின்னணு ஏலம் நிறுத்தப்படும்.

இந்த விற்பனைத் தொடர்பாக ஏதேனும் பணியைச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் அசையாச் சொத்தில் ஏதேனும் உரிமையைக் கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்க நேரடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது.

விற்பனையானது கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பின்வரும் மேற்கொண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டது ஆகும்:

குறிப்பு: மின்–ஏலம் ஆனது https://bankauctions.in/ இணைய முகப்பு மூலம் 30–08–2024 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் தலா 10 நிமிடங்கள் வரையறுக்கப்பட்ட நீட்டிப்புடன் நடைபெறும்.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனை:

1. இங்கே கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டவருக்கு நன்கு தெரிந்த வரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன, ஆனால் கீழே கையொப்பமிட்டவர் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதலுக்கு பொறுப்பேற்க மாட்டார். ஏலப்புள்ளி தொகை, அல்லது ஏலதாரரிடம் ஏதேனும் பூசல் எழுமானால், அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமைக்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஒருமுறை ஏலத்திற்கு வைக்கப்படும். **2.** அசையாச் சொத்து நிர்ணய விலைக்குக் குறைவாக விற்பனை செய்யப்பட மாட்டாது. **3. ஏலம் உயர்த்தும் தொகை ஆவது: ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) 4.** சொத்து கொள்முதலுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் கிளை முகவரியில் மாற்றத்தக்க வகையில் **"டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்."** பெயரிலான கேட்பு வரைவோலை மூலம் மேற்குறிப்பிட்டவாறான முன்வைப்புத்தொகையால் இணைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். வெற்றிபெறாத ஏலதாரர்களுக்கு ஏலம் முடிந்த பிறகு கேட்பு வரைவோலைகள் திருப்பியளிக்கப்படும். NEFT/RTGS/IMPS வழியே முன்வைப்புத்தொகைச் செலுத்துவதற்கு, அதிகாரப்பூர்வ அதிகாரியை தொடர்பு கொள்ளவும். **5.** உயர்ந்தபட்ச ஏலதாரர், ஏலப்புள்ளி அளிக்க அவர் எப்போதும் சட்டப்பூர்வத் தகுதியடைந்தவர் மேலும் ஏலப்புள்ளித் தொகை நிர்ணய விலைக்குக் குறைவில்லாதது என்பதைப் பொறுத்து வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்படுவார். அளிக்கப்பட்ட விலை பற்றாக்குறை என தெளிவாகக் காணப்படுகையில் உயர்ந்தபட்ச ஏலப்புள்ளியை ஏற்க மறுப்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். **6.** பதிவுக் காரணங்களுக்காக, விற்பனை ஒத்தி வைத்தல்/நிறுத்துதல் என்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். **7. முன் அனுமதியில் 20–08–2024 அன்று காலை 11 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் அசையாச் சொத்தினை பார்வையிடலாம். 8.** வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்பட்ட நபர், இவ்வித அறிவிப்புக்குப் பிறகு உடனடியாக, 24 மணி நேரத்திற்குள் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்வைப்புத்தொகை உள்ளடக்கமாக கொள்முதல் பணம்/ ஏலப்புள்ளித் தொகையின் இருபத்தைந்து சதவீதத்தைச் செலுத்த வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், சொத்து உடனடியாக புதிதாக ஏலத்திற்கு வைக்கப்படும்/தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். **9.** மேற்கூறியவாறு முதற்கட்டத் தொகைச் செலுத்தப்பட்டு விட்டால், செலுத்த வேண்டிய கொள்முதல் பணத்தின் மீதித்தொகையானது சொத்து விற்பனை உறுதியானத் தேதியிலிருந்து, இந்த நாளைத் தவிர்த்து, 15 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்பாக, அல்லது 15ஆவது நாள் ஞாயிற்றுக்கிழமை அல்லது பிற விடுமுறையாக அமைந்தால், 15வது நாளுக்குப் பிந்தைய முதல் அலுவலக நாளில் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். **10.** மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் பணப்பட்டுவாடாச் செய்யத் தவறும்பட்சத்தில், சொத்து புதிதாக ஏலத்துக்கு வைக்கப்படும்/ தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். முன்வைப்புத்தொகை உட்பட செலுத்தியத் தொகை **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்** மூலம் கைக்கொள்ளப்படும். மேலும் தவறும் கொள்முதலாளர் சொத்துக்குரிய அனைத்து கோரூரிமைகளையும் இழப்பார். **11.** சொத்துக்கு உட்பட்ட, **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்கு** தெரிந்த, ஏதேனும் வில்லங்கங்களின் விவரங்கள்: மேற்கூறிய அட்டவணைப்படி. திட்டமிடும் ஏலதாரர் சொத்து வரி, மின்கட்டணம் ஏனைய சட்டப்பூர்வ பொறுப்பு நிலுவைகள் உட்பட சொத்து மீதான வில்லங்கங்கள் குறித்து தங்கள் சொந்த தனி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார். **12.** அனைத்து பிற விவரங்களுக்கு அல்லது மின்–ஏலம் மீதான இயங்குதள பயிற்சி நடைமுறைக்கு, எதிர்நோக்கும் ஏலதாரர்கள் சேவை வழங்குநர், M/s. 4Closure, பிளாக் எண்.605, 6 ஆவது தளம், மைத்ரிவனம் கமர்ஷியல் காம்ப்ளக்ஸ், அமீர்பேட், ஹைதராபாத்–500038 மூலமாக அதன் ஒருங்கிணைப்பாளர் திரு. அரிஜித் குமார் தாஸ் அவர்களை கைபேசி எண். 8142000725, 8142000066, 8142000062 மற்றும் மின்னஞ்சல் முகவரி: arijit@bankauctions.in மற்றும் மின்னஞ்சல் முகவரி: info@bankauctions.in அல்லது மணீஷ் பன்சால், மின்னஞ்சல் முகவரி Manish.Bansal@tatacapital.com அதிகாரப்பூர்வ அதிகாரி கைபேசி எண் 8588983696 தொடர்பு கொள்ளலாம். உங்கள் விசாரணையை வாட்ஸ்அப் எண் – 9999078669–க்கு அனுப்பவும். **13.** உயர்ந்தபட்சமாக அறிவிக்கப்பட்ட ஏலத் தொகை மீது 1% மூலத்தில் வரி பிடித்தம் பொருந்தும். மேலும் அது உயர்ந்தபட்ச ஏலதாரரால் செலுத்தப்பட வேண்டும். பணப்பட்டுவாடா ஆனது உரிமையாளர்/ கடன்தாரர்(கள்) பான் எண்ணில் செலுத்தப்பட வேண்டும் மேலும் சலான் நகல்பிரதி எங்கள் நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். **14.** மேற்கூறிய விவரங்களுக்கு கீழ்க்காணும் கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளத்தில் கொடுக்கப்பட்ட இணைப்பை படிக்கவும் https://surl.li/ydfadc **15.** மேலும் https://www.tatacapital.com/property-disposal.html இணைப்பையும் காண்க.

கவனத்தில் கொள்க– டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆனது இந்த சொத்து விற்பனை/ஏலத்துக்காக குறிப்பிட்டுள்ள ஏலம் விடும் கூட்டுதாரரைத் தவிர ஏதேனும் தரகர்/முகவரை நியமிக்கவில்லை. விருப்பமுள்ள நபர்கள் இது சம்பந்தமாக அனைத்து சந்தேகங்கள் மற்றும் விசாரணைக்கு கீழேக் கையொப்பமிட்டவர் அல்லது அதிகாரப்பூர்வ அதிகாரியை மட்டும் தொடர்பு கொள்ள வேண்டும்.

இடம்: தமிழ்நாடு ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி,
நாள்: 13.08.2024 டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு...

தினகரன்

8904156777

9.30 AM - 6.00 PM